செ.வெ.எண்:19/2018 நாள்:11.04.2018

**பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் ரூ.14.49 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு.!!!**



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, இளையான்குடி, காளையார்கோவில் ஆகிய வட்டங்களில் இன்று (11.04.2018) பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வாணியங்குடி ஊராட்சியில் பொதுப்பணித்துறையின் (மருத்துவ பிரிவு) மூலம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் விபத்து கால அவசர சிகிச்சை பிரிவு கட்டுமானப் பணி நடைபெற்று வரும் பணியினை பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மாவட்ட தொடக்க நிலை இடையிட்டுச் சேவைகள் மைய முடிவுற்ற பணிகளை பார்வையிட்டார். பின்னர் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் கல்லூரி வகுப்பறை கட்டிடம் கட்டுமானப் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு, அப்பணிகளை விரைந்து முடித்துடுமாறும், கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்தினை பார்வையிட்டு அதன் செயல்பாட்டினை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். சுத்திகரிப்பு மையத்திலிருந்து பெறப்படும் தண்ணீரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்திலுள்ள தோட்டப் பராமரிப்பிற்கு பயன்படுத்தி அதன் தேவையை பொதுமக்கள் அறிந்திடும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டுமென அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத்துறையின் மூலம் ரூ.23.50 இலட்சம் மதிப்பீட்டில் மானாமதுரை-பரமக்குடி (வழி) தெ.புதுக்கோட்டை 1.4 கி.மீட்டர் சாலையில் மேற்கொள்ளப்படும் சிறப்பு பழுது பார்த்தல் பணியினையும், ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் மானாமதுரை-பரமக்குடி (வழி) தெ.புதுக்கோட்டை 2 கி.மீட்டர் சாலையில் மேற்கொள்ளப்படும் மேம்படுத்துதல் மற்றும் தடுப்புச்சுவர் கட்டுதல் பணியினையும், ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் மானாமதுரை-பரமக்குடி (வழி) தெ.புதுக்கோட்டை சாலையில் மேற்கொள்ளப்படும் தடுப்புச்சுவர் கட்டுதல் பணியினையும், ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் மானாமதுரை-பரமக்குடி (வழி) தெ.புதுக்கோட்டை சாலையில் 2.8 கி.மீட்டர் சாலையில் மேற்கொள்ளப்படும் இடைவழித் தடத்திலிருந்து இருவழி தடமாக அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல், தடுப்புச்சுவர் கட்டிடப் பணியினையும், ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் முனைவென்றி சாலை 2.8 கி.மீட்டர் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி மேம்படுத்துதல் பணி மற்றும் சிறுபாலம்

திரும்பக் கட்டுதல் பணியினை பார்வையிட்டு விரைந்து முடித்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் காளையார்கோவிலில் பொதுப்பணித்துறையின் மூலம் (கட்டிடப் பிரிவு) ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டிட கட்டுமானப் பணியினை பார்வையிட்டு விரைந்து பணிகளை முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.வனிதா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.இராமபிரதீபன், செயற்பொறியாளர் (மருத்துவக் கட்டிட பிரிவு) திரு.புவனேஸ்வரன், சிவகங்கை நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் திரு.மோகனகாந்தி, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை கட்டிடம்) திரு.தினகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: **செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.**